## 2026 தேர்தலிலும் 7–வது முறையும் கழகம் ஆட்சியைப் பிடிக்க

# ‘200 தொகுதிகளில் வெற்றி’ என்ற இலக்கை நோக்கி உழைப்போம்!

## கோவையில் – மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில்

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**கோவை,நவ.7-** திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை (05-11-2024), கோவையில் நடைபெற்ற ‘கோவை மாவட்ட நிர்வாகிகளுடன் சந்திப்பு’ நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

**இந்நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞர் ஆகிய மூவரின் வாழ்க்கையிலும் மிக முக்கியமான ஊர் இந்தக் கோவை!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் - கோவைக்கும் வரலாற்றுரீதியான பிணைப்பு இருக்கிறது.

திராவிட இயக்கத்துக்கும் - கழகத்துக்கும் ஏராளமான தளகர்த்தர்களைக் கொடுத்த மண், இந்தக் கோவை மண்!

அந்த வழித்தடத்தில், கரூர் மாவட்டத்தை சேர்ந்தவராக இருந்தாலும் கோவை மாவட்டத்துக்கு ஒரு சிறந்த செயல்வீரராக அமைச்சர் செந்தில் பாலாஜி கிடைத்திருக்கிறார்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகச் செயலாளர்களும் - மாவட்டத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் நிர்வாகிகளும் வந்திருக்கிறீர்கள். உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி கொடுத்திருக்கும் உற்சாகத்தோடு, வரும் சட்டமன்றத் தேர்தலில் நாம் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும்!

நம்முடைய கழகத்துக்கு உள்ள கட்டமைப்பு தமிழ்நாட்டுக்கு வேறு எந்த கட்சிக்கும் கிடையாது. நாம் நினைத்தால் எந்தச் செய்தியையும் தமிழ்நாட்டு மக்களிடம் உடனடியாக கொண்டு சேர்க்க முடியும். எனவே நமது சாதனைப் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணிகளைச் செய்ய வேண்டும்.

இளைஞர்களிடம் கொள்கைகளை விதைப்பதுதான் மிக முக்கியம். அவர்கள் தான் எதிர்காலத்துக்கான விதைகள். எனவே, பேச்சாளர்களை அழைத்து பாசறைக் கூட்டங்களை நடத்துங்கள். ஒவ்வொரு பகுதியிலும் கொள்கை வீரர்களாக பத்து முதல் பதினைந்து இளைஞர்களை உருவாக்க வேண்டியது உங்கள் ஒவ்வொருவரின் கடமை.

நிர்வாகிகள் உங்களது குடும்பத்திற்கும், தொழிலுக்கும் நேரம் ஒதுக்கி கவனம் செலுத்துங்கள். அதே சமயம் ஒரு நாளில் இரண்டு மணி நேரத்தைக் கழகத்துக்கென ஒதுக்குங்கள். வார இறுதியில் ஒரு நாளை முழுமையாகக் கழகப் பணிக்கு ஒதுக்குங்கள். அடிமட்டத் தொண்டர்களுக்கு நீங்கள்தான் பலமாகவும் - பாலமாகவும் இருக்க வேண்டும்.

கோவை மாவட்டத்துக்குட்பட்ட பத்து சட்டமன்றத் தொகுதிகளையும் கழகக் கூட்டணி கைப்பற்றியாக வேண்டும். அதற்கான முதல் சந்திப்புதான் இந்தக் கூட்டம்!

2026-லும் நாம்தான் ஆட்சிக்கு வரப்போகிறோம். அது சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது. நான் ஒரு இலக்கு கொடுத்திருக்கிறேன். 200 தொகுதிகளில் வெற்றி என்பதுதான் அந்த இலக்கு. அதனால் உங்கள் மாவட்டத்தில் இருக்கும் 10 தொகுதிகளுக்கும் நீங்கள்தான் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும்.

எழுச்சிமிகு தி.மு.க. ஏழாவது முறையும் ஆட்சியைப் பிடிக்க எந்நாளும் உழைப்போம்!

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**07/11/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ‘கல்லணை’ செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024

---

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2024) கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில், கோவை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்டங்களை அதிக அளவில் கொண்டு சேர்த்து, சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். சந்திரமோகன் மற்றும் துறை பணியாளர்களை பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில்

## ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் - நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

திண்டுக்கல், நவ. 7- திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நத்தம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள், கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணிச் செயலாளர் பரணி கே. மணி, வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் கவிஞர்.சல்மா, நத்தம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் திரு.ரஞ்சன் துரை ஆகியோர் இக்கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள், கழகநிர்வாகிகளுக்கு தேர்தல் பணி குறித்த ஆலோசனைகளை வழங்க உள்ளனர்.

வாக்குச்சாவடி முகவர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் நாள், இடம் விபரம் வருமாறு:-

**ஒட்டன்சத்திரம்**
**சட்டமன்றத் தொகுதி**

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் 09.11.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம், கீரனூர் பேரூர், பழனி கிழக்கு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொப்பம்பட்டி வீரக்குமார் திருமண மண்டபத்திலும்,

09.11.2024 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றியத்திற்கு பொருளூர், ஸ்ரீகுமரன் மஹாலிலும்,

09.11.2024 சனிக்கிழமை மதியம் 3.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்கு கேதையுறம்பு, சமுதாயக்கூடத்திலும்,

09.11.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் தெற்கு ஒன்றியத்திற்கு சத்திரப்பட்டி, கொங்கு மஹாலிலும்,

09.11.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு ஒட்டன்சத்திரம், ஆண்டவர் திருமண மண்டபத்திலும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

**வேடசந்தூர்**
**சட்டமன்றத் தொகுதி**

அதுபோல் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 09.11.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வேடசந்தூர் தெற்கு ஒன்றியம் மற்றும் வேடசந்தூர் பேரூராட்சிக்கு வேடசந்தூர், சினேகா மஹாலிலும்,

09.11.2024 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் மற்றும் எரியோடு பேரூராட்சிக்கு ஸ்ரீராமபுரம், முடக்காட்டுக் கோயில் மண்டபத்திலும்,

09.11.2024 சனிக்கிழமை மதியம் 3.00 மணிக்கு வடமதுரை கிழக்கு ஒன்றியம் மற்றும் அய்யலூர் பேரூராட்சிக்கு அய்யலூர், பழனிவேல் திருமண மண்டபத்திலும்,

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம் மற்றும் பாளையம் பேரூராட்சிக்கு பாளையம், கே.ஆர்.கே. திருமண மகாலிலும்,

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியத்திற்கு புளியம்பட்டி, வி.எஸ்.கே. திருமண மண்டபத்திலும்,

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணிக்கு வடமதுரை மேற்கு ஒன்றியம் மற்றும் வடமதுரை பேரூராட்சிக்கு வடமதுரை, சுப்பா நாயுடு மகாலிலும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

**நத்தம்**
**சட்டமன்றத் தொகுதி**

அதுபோல் நத்தம் சட்டமன்றத் தொகுதியில் 08.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திண்டுக்கல் தெற்கு ஒன்றியத்திற்கு திண்டுக்கல், ஒன்றிய கழக அலுவலகத்திலும்,

09.11.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நத்தம் வடக்கு ஒன்றியத்திற்கு செந்துறை, சமுதாயக்கூடத்திலும்,

09.11.2024 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு நத்தம் பேரூராட்சிக்கு நத்தம், கே.எஸ்.எஸ். திடலிலும்,

09.11.2024 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நத்தம் தெற்கு ஒன்றியத்திற்கு ரெட்டியபட்டி, வத்திப்பட்டி ஐஸ்வர்யா மஹாலிலும்,

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சாணார்பட்டி வடக்கு ஒன்றியத்திற்கு அதிகாரிபட்டி, சமுதாயக்கூடத்திலும்,

10.11.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு சாணார்பட்டி தெற்கு ஒன்றியத்திற்கு கோபால்பட்டி, தீபாஸ் மகாலிலும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

எனவே, மேற்கண்ட வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள், கழக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி அறிவித்துள்ளார்.